**O.S.No. 225/2018**

**PW1 : கிருஷ்ணவேணி** தேதி 12.11.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை எதற்காக யார் தாக்கல் செய்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். என் மாமனார் சொத்தில் என் கணவருக்கு பங்கு இருப்பதாக கோரி தாக்கல் செய்திருக்கிறார். என் கணவர் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு அதில் உள்ள ஆவணம் மற்றும் சங்கதிகளை தெரிந்து கொண்டேன். என் மாமனார் செங்கோடகவுண்டருக்கு 2 ஆண் மக்கள். என் கணவர் மற்றும் சண்முகம். செங்கோடகவுண்டருக்கு ஒரு மகள் இருந்தார். திருமணமாகி பாக்கியம் இறந்து விட்டார். அவருக்கு மகன் இருக்கிறார். மேற்படி பாக்கியத்தின் மகன் ஈஸ்வர மூர்த்தியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் மாமனார் 5 கிரையமாக சொத்துகளை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். 1969 லே 5 கிரையங்களையும் வாங்கி முடித்துவிட்டார். 1986 ல் செங்கோடகவுண்டர் இறந்துவிட்டார். 1986 க்கு பின்னிட்டு என் கணவர் தரப்பில் தாவா சொத்தை பிரித்து கொள்ளலாம் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டருக்கு எதன் அடிப்படையில் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்று சொல்கிறேன் என்றால் நாச்சிமுத்து தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் வாங்கியிருக்கிறார். நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகளை நாங்கள் தரப்பினராக சேர்க்கவில்லை. நாச்சிமுத்துவிடம் இருந்து தான் 4 ம் பிரதிவாதி லோகநாதன் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நாச்சிமுத்து என் மாமனாருக்கு வாரிசு அல்ல. என் மாமனாருக்கு சொந்தமான சொத்தில் நாச்சிமுத்து பாகம் கோர முடியாது என்று சொன்னால் சரிதான். நாச்சிமுத்துவிற்கு சொந்தமான சொத்துகளில் என் கணவருக்கோ அவர் சகோதரருக்கோ உரிமை இல்லை என்றால் சரிதான். என்

மாமனார் வாங்கிய கிரையத்தில் என் மாமனார் தரப்பினர் அல்ல என்றால் அது எனக்கு தெரியாது. கிரய பத்திரங்கள் 50 – 60 வருடத்திற்கு முந்நுதைய ஆவணங்கள் என்பதால் அதன் சரத்துகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மாமனார் கிரையம் வாங்கிய சொத்துகள் அனைத்தும் அவர் தான் அனுபவத்து வந்தார் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் நாச்சிமுத்துக்கு சொந்தமான சொத்துகள் எதுவும் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டருக்கும் என் மாமனாருக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரியல்ல கூட்டு பங்குதாரர் என்று சொல்கிறேன். 3 பேரும் கூட்டாக கிரையம் வாங்கியதில் எங்களுக்கு என் மாமனாரின் பங்கை பிரித்து கொடுக்கவில்லை. யார் யார் கூட்டாக கிரையம் வாங்கினார்கள் என்றால் என் மாமனார், நாச்சிமுத்து கவுண்டர், முத்துசாமி கவுண்டர் ஆகியோர் கூட்டாக 3 ஏக்கர் 97 சென்டை கிரையம் வாங்கினார்கள். மேற்படி மூவரும் கூட்டாக வாங்கிய கிரைய பத்திரத்தை என் கணவர் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. லோகநாதன் வாங்கிய இடத்தை வீட்டு மனையாக பிரித்து விட்டார் என்றால் சரிதான். வீட்டுமனையாக பிரித்த வீட்டுமனைகளை சில பேருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் யார் யார் தரப்பினர்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். லோகநாதன் ஆறுமுகம் பழனிசாமி மாராயம்மாளின் வாரிசுகள் ஆகியோர் உள்ளார்கள். லோகநாதனிடம் இருந்து கிரையம் வாங்கிய கிரையதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. அவர்களை 9 முதல் 12 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்ட விவரமும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் லோகநாதன் தரப்பில் என்ன பதில் தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. லோகநாதன் எந்த காலகட்டத்தில் 9 முதல் 12 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

என் கணவருக்கும் லோகநாதன் விற்ற விவரம் தெரியாது. என் மாமனார் இறந்த பின்னிட்டு என் கணவரும் அவருடைய சகோதரரும் பிரிவினை செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை. என் மாமனார் என் கணவருக்கும் அவர் சகோதரருக்கும் வாய்மொழியாக ஓட்டி கொள்ளும் படி பிரிவினை செய்து கொடுத்தார். என் மாமனார் கிரையம் வாங்கிய இடத்தை நானும் என் கணவரும் அவருடைய சகோதரர் சண்முகம் அனுபவத்து வருகிறோம். என் கணவரும் சண்முகமும் அனுபவித்து வரும் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 15 ¾ சென்ட். தற்போது எவ்வளவு அனுபவத்தில் உள்ளேன் என்றால் அதை அளந்து பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கில் எங்களுடைய இடத்தை பிரதிவாதிகள் எடுத்து கொண்டதாக நான் பரிகாரம் கேட்கவில்லை. எங்கள் அனுபவத்தில் உள்ள சொத்தை தான் நான் கேட்கிறேன். என் கணவரும் சண்முகமும் அவர் தந்தையின் சொத்துகளை இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரை பாகப்பிரிவினை செய்து கொள்ளாததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் சண்முகம் ஒத்து வராததால் செய்து கொள்ளவில்லை. சண்முகம் 2007 ல் இறந்து விட்டார். அவருடைய வாரிசுகளிடம் பிரிவினை செய்து கொள்ளும் படி கேட்டேனா என்றால் கேட்டேன். அதற்கு அவர்கள் செங்கோடகவுண்டர் பெயரிலேயே இருக்கட்டும் செலவு செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். சண்முகத்தின் வாரிசுகள் இவ்வழக்கில் எதிர் வாதம் செய்யாமல் தோன்றா தரப்பினராக உள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 4 முதல் 8 பிரதிவாதிகள் எதற்காக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். லோகநாதன் நாச்சிமுத்து கவுண்டரின் மகன். பழனிசாமி ஆறுமுகம் ஆகியோர் முத்துசாமியின் மகன்கள். அவர்களும் சொத்தில் பங்கு கேட்பார்கள் என்பதால் அவர்களையும் தரப்பினராக சேர்த்திருக்கிறோம். என்

கணவரின் சகோதரி பாக்கியத்தின் மகன் ஈஸ்வர மூர்த்தி இறந்து விட்டார். ஈஸ்வர மூர்த்திக்கு மனைவி செல்வி மற்றும் மகள் பவித்ரா மகன் ஹரீஷ் ஆகியோர் வாரிசுகளாக உள்ளார்கள். அவர்களையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. என் கணவர் தாக்கல் செய்த இவ்வழக்கு என் மாமனாரின் மற்ற வாரிசுகளை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. ஈஸ்வர மூர்த்தி அவருடைய பங்கை பொறுத்து எங்களுக்கு விடுதலை செய்து கொடுத்தார். மேற்படி விவரம் வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். லோகநாதன் வாங்கிய கிரையம் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. லோகநாதன் வாங்கிய கிரய ஆவணத்தில் என்ன வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. லோகநாதன் 9 முதல் 12 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து கிரைய பத்திரத்தில் என்ன சரத்துகள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. 9 முதல் 12 பிரதிவாதிகளும் அவர்கள் கிரையம் பெற்ற சொத்தை பல நபர்களுக்கு விற்று விட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. லோகநாதன் வீட்டுமனைகளை பிரிவினை செய்யும் போது நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் பிரிவினை செய்த விவரம் தெரியாது. என் கணவர் எந்த ஆவணத்தையும் பார்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரியல்ல மேற்படி கிரைய பத்திரங்கள் எதுவும் எங்களுக்கு தெரியாது என்பதால் அதை பார்க்கமுடியவில்லை. லோகநாதன் நீதிமன்ற தீர்ப்பின் மூலமாக சொத்து வந்ததாக சொல்லியிருந்தால் அது எனக்கு தெரியாது. இந்தவழக்கில் லோகநாதன் கிரையம் பெற்ற மூல ஆவணம் சம்மந்தமாக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கின் விவரம் முழுமையாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.